**உறுப்பினர் செயலாளரின் செயல்முறைகள்**

**பிறப்பிப்பவர்: திரு. இரா. சுதன், இ.ஆ.ப (ஓய்வு)**

ந.க.எண்: ACE / 118/ஆ3/CG-24 /MS/2022, நாள்: .03. 2023

பொருள் : பள்ளிக் கல்வித் துறை – 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஏப்ரல் மாதம் முதல் வழங்கப் படவிருக்கும் உயர்கல்வி வழிகாட்டல் செயல்முறைகள் – சார்ந்து

பார்வை : அரசாணை நிலை எண்:5, பள்ளிக் கல்வித் துறை (ப.க.5(1)) துறை நாள்: 21.02.2022.

.....

**"நான் முதல்வன்"** திட்டம் சார்ந்து இவ்வாண்டு பன்னிரெண்டாம் வகுப்பில் படித்து வரும் மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டல் செயல்பாடுகள் வருகிற ஏப்ரல் மாதம் முதல் தொடர்ச்சியாக நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

2 இதனைத் தொடர்ந்து, இவ்வாண்டு பத்து மற்றும் பனிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதும் அனைத்து மாணவர்களையும் இணைத்து அந்தந்த வகுப்பு ஆசிரியர்கள் வாட்ஸாப் குழு (Whatsapp Group) உருவாக்கிட தலைமை ஆசிரியர்கள் வாயிலாக அறிவுறுத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

3. ஏப்ரல் 3ஆம் தேதி அன்று முடிவடையவுள்ள பொதுத் தேர்வுக்கு பின்னர் அனைத்து மேல்நிலை பள்ளிகளிலும் பனிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கான கல்லூரி சேர்க்கையை உறுதி செய்ய உதவி மையங்கள் ஏப்ரல் 21 ஆம் தேதி முதல் சார்ந்த பள்ளிகளில் அமைக்கப்படவுள்ளது. எனவே, பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் 21.04.2023 முதல் பள்ளிகளுக்கு வந்து தங்கள் உயர்கல்விக்குத் தேவைப்படும் ஆலோசனைகள் மற்றும் உதவிகள் பெற்று கொள்ளலாம்.

4. இந்த உதவி மையங்களில் தலைமை ஆசிரியர், உயர்கல்வி வழிகாட்டி பயிற்சி பெற்ற அப்பள்ளியை சார்ந்த ஆசிரியர், முதன்மை கருத்தாளர், மற்றும் கல்லூரி NSS மாணவர் என 4 பேர் கொண்ட குழு செயல்படவுள்ளது. அதற்கான தகுந்த சுற்றறிக்கைகளை சார்ந்த மாவட்ட கல்வியியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவன முதல்வர்கள், முதனமைக் கருத்தாளர்கள், தலைமை ஆசிரியர்கள், உயர்கல்வி வழிகாட்டி பயிற்சிப் பெற்ற ஆசிரியர்கள் உள்ளிட்டோருக்கு அனுப்பிட அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

5. பள்ளியில் உள்ள உயர் தொழில்நுட்ப வகுப்பறைகளைப் பயன்படுத்தி, உயர்கல்வி சேர்க்கைக்கான படிவங்கள் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளதால் அவ்வகுப்பறைகளை தயார்

நிலையில் வைத்திட அனைத்து தலைமை ஆசிரியர்களுக்கும் அறிவுறுத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

6. ஏப்ரல் மாதம் முதல் தொடர்ச்சியாக நடைபெற உள்ள உயர்கல்வி வழிகாட்டல் செயல்பாடுகள் அனைத்திலும் மாவட்ட முதன்மைக் கருத்தாளர்களை (Career Guidance DIET Faculties) இணைத்துக் கொண்டு செயல்பட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

7. மேலும், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் வாயிலாக இவ்வாண்டு அனைத்து வகை நுழைவுத் தேர்வுகளுக்கு ம் விண்ணப்பித்துள்ள (CUET. JEE. NEET. Etc..) மாணவர்களின் பட்டியலை கீழே கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து வருகின்ற 31.03.2023 க்குள் இவ்வலுவகத்திற்கு அனுப்பி வைத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| வ. எண் | மாவட்டம் | மாணவரின் பெயர் | EMIS No. | பள்ளியின் பெயர் | பாடப்பிரிவு | விண்ணப்பித்துள்ள நுழைவுத் தேர்வு(JEE/NEET/CUET/etc..) |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

உறுப்பினர் செயலாளர்

பெறுநர்

1. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்ட கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள்.

நகல்

1. இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
2. அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் (முதன்மைக் கல்வி அலுவலர்கள் வழியாக)